[1987 மார்ச் 2

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, கொடைக்கானல் மெயின் சாலையிலிருந்து கொடைக்கானல் வரை இப்பொழுது சாலை பழுதடைந்திருக்கிறது. வேலைகளை பார்த்து வருகிறார்கள். ஆனால் முக்கியமான இடங்களில் வருடக் கணக்கில் வேலைகள் பார்த்தும் வேலைகள் சுணங்கிக்கிடப்பதால், இப்பொழுது அது ஒரு முக்கிய கோடைவாசஸ்தலமாக இருப்பதால் அந்த வேலைகளை அரசு சீக்கிரம் முடிக்க முடுக்கி விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே என்னிடத்தில் உள்ள குறிப்பில் அது தார் சாலையாக இருக்கிறது, இப்பொழுது பேருந்துகள் எல்லாம் சென்று கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். பழுதடைந்து இருக்குமேயானால் பராமரிப்பிலே அதை எடுத்துக் கொண்டு செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, பழனி-பள்ளங்கி சாலை என்பது மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுமா? அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனியாக பார்க்கின்றபோது அதிலே சேர்ந்திருந்தால் செய்யலாம். சேர்க்க வாய்ப்பு இருந்தாலும் செய்யலாம்.

போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு தனியார் மருத்துவமனையில் கண் பரிசோதனை செய்ய அனுமதி.

13.—(*வினா எண். 10502)—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை செய்ய தனியார் மருத்துவ மனையில் அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 8 அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களுக்கு தனியார் மருத்துவ மனைகளில், கண் பரிசோதனையும் 6 போக்குவரத்துக் கழகங்களின் ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை அரசு மருத்துவ மனைகளிலும் செய்யப்படுகிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனையில் அதிகமாக பீஸ் வாங்குகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது என்றாலும் ஒரு குறிப்பிட்ட சிகிச்சைக்காக என்று மொத்தமாக அந்த ஊழியர்களுக்கு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 மார்ச் 2]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கண் பரிசோதனை சரியாக அவர்களுக்குக் கண் பார்வை இருக்கிறதா என்பது பற்றி பரிசோதனை செய்வதற்காக. அதிலே கூட தனியார் மருத்துவமனையில் சில இடங்களில் இருக்கிறது என்பதற்குக் காரணம் ஏற்கனவே இருந்ததை மாற்றுவது என்பது கொஞ்சம் பிரச்சனையாக இருக்கிறது. தொழிலாளர்கள விரும்ப வில்லை என்பதற்காக அதை அப்படியே தொடர்ந்து வைத்திருக் கிறோம். அவர்கள் சிகிச்சைக்கான முறையைக் கேட்கிறார்கள். அதிலே கூட இப்பொழுது தனியார் மருத்துவ மனையில் பல இடங் களில் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை முழுவதுமாக அரசு மருத்துவமனைக்கு மாற்றி அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்ய லாம் என்பது பற்றி தொழிற்சங்கத் தலைவர்களிடம் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். அதிலே ஒரு முடிவு ஏற்படுகின்ற போது இந்த நிலைமைகள் முழுவதும் மாற்றப்படும்.

திரு. க. சோலைராசு: தலைவர் அவர்களே, ஓட்டுநர் களுக்கு 45 வயதிற்குப் பிறகு முழுக்க வேறு பணிகள் கொடுப் பதற்கான சாத்தியக்கூறுகள் துறையில்இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, முழுக்க முழுக்க வேறு பணிகள் கொடுப்பது என்பது முடியாத காரியம். நடைமுறையில் அதைச் செய்ய முடியாது. அப்படியே கொடுத்தாலும், ஓட்டுநர்கள் அதை ஏற்றுக் கொள்ள விரும்பாத ஒன்றாக இருக்கும். யாராவது அப்படி கட்டாயமாக அவர்கள் வண்டி ஓட்டக்கூடாது, கண் பார்வை சரியாக இல்லை என்று தெரிந்தால், அல்லது ஏதாவது விபத்துக்களிலே அவர்கள் மாட்டி கொண்டு பிரச்சினைகள் ஏற்பட்டால் அப்படிப்பட்டவர்களுக்கு சில மாற்றங்களை நாங்களே செய்து கொடுத்துக் கொண் டிருக்கிறோம். எல்லோருக்கும் மாற்றிக் கொடுப்பது என்பது முடியாத காரியம். எனவே நாம் அதைப்பற்றி பேச முடியாது.

(முற்பகல் 10—10)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர் களே, தனியார் மருத்துவமனைகளிலே ஓட்டுநர்களை அனுப்பக் கூடிய நேரத்தில் சில அதிகாரிகள்-நிர்வாகத்தைச் சேர்ந்த அதிகாரி கள்-அவர்களுக்கு வேண்டாத ஊழியர்களுக்கு கண் பார்வை சரி யில்லை என்ற முறையில் சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்வதாக அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா? அப்படிப்பட்ட நடவடிக்கைகளைத் தடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, சில புகார்கள் அவ்வப்போது சொல்லப்படுகின்றன. அதை விசாரிக்கின்றபோது அதிலே உண்மை இருப்பதாக கண்டுபிடிக்கப் பட முடியாமல் இருக்கின்றன. அப்படி அதில் உண்மை இருந்தால் சில இடங்களில் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால் தனி யார் மருத்துவமனைகளில் மட்டும் அது வராது. அரசு மருத்துவ மனைகளிலேயும் அது வரும். ஒருவேளை, தனியார் மருத்துவ மனைகளில்ல இப்படி வருகிறது என்று சந்தேகம் இருக்குமேயா னால், நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஒப்புக்கொண்டால், அதனை உடனடியாக அரசு மருத்துவ மனைக்கு மாற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகவே, இந்தப் பிரச்சினை இப்போது உங்களிடத்திலேதான் இருக்கிறது. எனவே, மருத்துவப் பரிசோதனைஅல்லது மருத்துவச் சிகிச்சை அத்தனையும் தனியார் துறையிலிருந்துஅரசுத் துறைக்கு மாற்றுவதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து நட வடிக்கை எடுத்துவிட்டால் இந்தப் பிரச்சினை வராது என்று நான் கருதுகிறேன். எனவே, இந்தப் புகார்கள் இனிமேல் வந்தால், என்னிடத்திலே நேராகச் சொன்னால் கட்டாயம் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நடத்துநர் பணிக்கும், ஓட்டுநர் பணிக்கும் ஆட்கள் எடுக்கின்ற போது, குறைந்தபட்சம் 160செ.மி. உயரம் இருக்கவேண்டும் என்று அரசு கட்டுப்பாடு விதித்து இருக்கிறது. நம்மிடையே பலர் நிச்சயமாக 160 சென்டிமீட்டர் உயரம் இல்லாதவர்களாக இருந்து கொண்டிருக்கிற காரணத்தால் அந்த உயர அளவை 155 சென்டிமீட்டர் என்ற அளவுக்குக் குறைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கண் பார்வை சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந் தாலும், அதன் தொடர்புடையதாக இக்கேள்வி இல்லையெனி லும், 160 சென்டி மீட்டர் உள்ளவர்கள் கிடைக்காத நேரத்தில் அதைப் பற்றி நாம் பரிசீலிக்கலாம். இப்போது அங்கேயிருந்து 160 சென்டிமீட்டர் கிடைக்கவில்லை என்று புகார் வரவில்லை. ஆனால், நான் 159 சென்டி மீட்டர் இருக்கிறேன், எனக்குக் கிடைக்கவில்லை என்ற புகார் மட்டும் வந்துகொண்டிருக்கிறது. 159 ஐ நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும்போது, 160 சென்டி மீட்டர் என்ற தேவையான அளவுக்கு நிறையப் பேர் இருக்கிறார்கள் என்று சொல்கின்ற காரணத்தினால், அதை மாற்றவில்லை. எப்போது அவர்கள் எடுக்கப்பட்டு, ஆட்கள் போதவில்லை என்ற நிலை வருகிறதோ, அப்போது அதுபற்றி பரிசீலிக்கலாம்.